முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

O.S. No. 37/2020

நாள்.04.02.2026

பி.வா.சா. 1- சின்னத்துரை

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்குச் சொத்திற்குரிய பட்டா, பத்திரங்கள் எதுவும் எனது பெயரில் இல்லை, 1வது பிரதிவாதி பேரின்பம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் தான் 1வது பிரதிவாதி பேரின்பம் மகன் என்பதைக் காட்ட அடையாள ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் மருதையாவுக்கும், 1வது பிரதிவாதி பேரின்பத்திற்கும் திருமணம் ஆனது என்பதைக் காட்ட ஆவணம் உள்ளதா என்றால் எனது தகப்பனார் பெயர் சுந்தர்ராசு. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது தகப்பனார் பெயர் மருதையா என சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. எனது தகப்பனார் சுந்தர்ராசு மற்றும் 1வது பிரதிவாதி பேரின்பத்திற்கும் எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் தெரியாது. 1வது பிரதிவாதி பேரின்பம் எந்த ஆண்டு பிறந்தார் என்றால் தெரியாது. மருதையா என்பவர் 1வது பிரதிவாதி பேரின்பத்திற்கு முதல் கணவர் என்றால் தெரியாது. எனது தகப்பனார் சுந்தர்ராசு மற்றும் 1வது பிரதிவாதி பேரின்பத்திற்கும் பிறந்த பிள்ளைகள் எத்தனை பேர் என்றால் நான் மட்டும் தான். நான் எந்த ஆண்டு பிறந்தேன் என்றால் 1980 ல். 1வது பிரதிவாதி பேரின்பம் 60 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தை அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நான் எத்தனை ஆண்டுகளாக தாவாசொத்து உள்ள கிராமத்தில் குடியிருக்கிறேன் என்றால் 40 வருடங்களாக. 1வது பிரதிவாதி பேரின்பம் தாவாசொத்து உள்ள கிராமத்தில் குடியிருக்கிறார் என்றால் 60 வருடங்களாக. 3 வது பிரதிவாதி தமிழரசி தாவாசொத்து உள்ள கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு 1வது தபசில் சொத்து 1வது பிரதிவாதியின் தாத்தா யாக்கோபுக்கு பாத்தியப்பட்டது என்றால் யாக்கோபு யார் என்று எனக்குத் தெரியாது.

தாவா சொத்து 1வது பிரதிவாதிக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என நான் கட்சி செய்கிறேன் என்றால் 1வது பிரதிவாதிக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் தாவா சொத்து 1வது பிரதிவாதிக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என எதிர்கோரிக்கை பரிகாரம் வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8 ம் வகுப்பு வரை. எனக்கு தமிழ் எழுத வாசிக்கத் தெரியும் என்றால் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கு 1வது தபசில் சொத்து 1வது பிரதிவாதியின் தாத்தா யாக்கோபுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யாக்கோபுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களில் யாக்கோபு வாரிசுகளுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். யாக்கோபுக்கு 1வது பிரதிவாதியின் தகப்பனார் அருளானந்தம், ஆசீர்வாதம் என்ற சந்தானம் வாரிசுகள் என்றால் அருளானந்தம் மட்டும் தான் தெரியும் மற்றவரை தெரியாது. இந்த வழக்கில் எதிர்வழக்குரை மற்றும் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக தபசில் சொத்து குறித்த வில்லங்கச் சான்றிதழ் பார்த்தேனா என்றால் பார்த்தேன். தபசில் சொத்து குறித்த வில்லங்கச் சான்றிதழ் எத்தனை ஆண்டுகளுக்குப் பார்த்தேன் என்றால் 1970 முதல் 2019 வரை வில்லங்கச் சான்றிதழ் பார்த்தேன்.1970 முதல் 2019 வரை வில்லங்கச் சான்றிதழ் எடுத்துப்பார்த்ததில் தபசில் சொத்து குறித்த வில்லங்கம் பார்த்தேனா என்றால் 1967 ல் ஒரு வில்லங்கம் இருந்தது. மேற்படி 1967 வில்லங்கம் தொடர்பான ஆவணத்தை எடுத்துப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி 1967 வில்லங்கம் தொடர்பான ஆவணத்தை எடுத்துப் பார்த்ததில், அது யாரால் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் அருளானந்தம் பார்வதிக்கு பாதை தொடர்பாக எழுதி கொடுத்திருந்தார். 1வதுபிரதிவாதி 60 ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்தை அனுபவித்ததற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1வது தபசில் சொத்து விஸ்தீரணம் 5 செண்ட் என்றால் சரிதான். 1வது தபசில் சொத்து விஸ்தீரணம் 5 செண்ட் நிலத்தில் கிழக்கில் உள்ள 2-1/2 செண்டிற்காக வழக்குப் போட்டுள்ளார் என்றால் சரிதான்.

1வது தபசில் சொத்து விஸ்தீரணம் 5 செண்ட் நிலத்திற்கு வடக்கில் வாதிக்கு சொந்தமான இடம் மற்றும் வீடு உண்டு என்றால் சரிதான். 1வது தபசில் சொத்து விஸ்தீரணம் 5 செண்ட் நிலத்தில் மேல்புறம் நான் வீடு கட்டி குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் வீடு கட்டி குடியிருக்கும் வீட்டின் விஸ்தீரணம் என்ன என்றால் 3 செண்ட். 1வது தபசில் சொத்து விஸ்தீரணம் 5 செண்ட் நிலத்திற்கு வடக்கில் கிழமேல் தெரு உண்டு என்றால் சரிதான். நான் பார்த்த வில்லங்கத்தில் வாதியின் தகப்பனார் பேச்சிமுத்து கிரையம் வாங்கியதாக வில்லங்கம் துலங்கியதா என்றால் இல்லை. 1வது பிரதிவாதியின் தாத்தா யாக்கோபு எந்த ஆண்டு இறந்தார் என்றால் தெரியாது. 1வது பிரதிவாதியின் தாத்தா யாக்கோபுக்கு வாரிசுகள் யார் என்றால் தெரியாது. 1வது பிரதிவாதியின் தகப்பனார் அருளானந்தம் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1990. 1வது தபசில் சொத்து விஸ்தீரணம் 5 செண்ட் நிலத்திற்கு வடக்கில் உள்ள இடத்தை 1வது பிரதிவாதியின் தாத்தா யாக்கோபு தான் வாதியின் முன்னோர்களுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான், சாட்சி தற்போது தெரியாது என சாட்சியம் அளிக்கிறார். வாதியின் பிராதை முழுமையாக படித்தேனா என்றால் ஆமாம். வாதியின் பிராதின் 3 வது பத்தியில் வாதியின் முன்னோர்களுக்கு யாக்கோபு என்பவர் கிரைய ஆவண எண்.1090/1938 ன் படி கிரையம் கொடுத்ததாக சொல்லியிருப்பதை படித்தேன் என்றால் படித்தேன். மேற்படி கிரைய ஆவண எண்.1090/1938 நகலை எடுத்துப் படித்தேனா என்றால் இல்லை. 1வது பிரதிவாதியின் தாத்தா யாக்கோபுக்கு வாரிசுகளான அருளானந்தம் மற்றும் ஆசீர்வாதம் என்ற சந்தானத்திற்கும் தாவா சொத்தில் தலா 2-1/2 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதியின் தந்தை அருளானந்தம், பார்வதி அம்மாளுக்கு 1 செண்ட் எழுதிக்கொடுத்தது போக, மீதி 1-1/2 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல 1/4 செண்ட் தான் எழுதிக்கொடுத்தார். 1வது பிரதிவாதியின் தந்தை அருளானந்தம், பார்வதி அம்மாளுக்கு 1 செண்ட் எழுதிக்கொடுத்ததைப்பொறுத்து பட்டா 1 செண்டுக்கு உட்பிரிவு எண்.399/1C4B பார்வதி அம்மாளுக்கு ஏற்பட்டுள்ளது என்றால் பட்டா தவறாக ஏற்பட்டுள்ளது.

பார்வதி அம்மாளுக்கு பட்டா தவறாக ஏற்பட்டுள்ளது எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 3 வருடங்களுக்கு முன்பாக தெரியும், RDO விடம் மனு கொடுத்துவிட்டேன். RDO விடம் மனு கொடுத்த நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது பிரதிவாதியின் தந்தை அருளானந்தம் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் தெரியாது. 1 வது பிரதிவாதியின் தந்தை அருளானந்தம் என்ன வேலை பார்த்தார் என்றால் ரயில்வேயில் பணிபுரிந்தார். 1 வது பிரதிவாதியின் தந்தை அருளானந்தம் தந்தை யாக்கோபு என்ன வேலை பார்த்தார் என்றால் தெரியாது. 1 வது பிரதிவாதியின் தந்தை அருளானந்தம் 1994 ல் உயில் எழுதிய விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உயில் நகலை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:34:23 +0530